**சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்திட்டம் - 2023**

---

சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் (ஐஎவ்ஏடி) இடையில் கைசாத்திடப்பட்ட 2021 யூன் 10 ஆம் திகதிய 2000003227 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 2000003226 ஆம் இலக்க மானியத்தின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் எஸ்ஏஆர்பி இற்காக ஸ்தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ அலகு அமுலாக்கல் முகவராகவுள்ளது. செயற்திட்டப் பகுதியில் உள்ள 40,000 கிராமப்புற சிறுநிலவுடமையாளர் குடும்பங்களின் மீட்சி மற்றும் சந்தைப் பங்குபற்றலை கட்டியெழுப்புவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் காலநிலை மீட்சி மற்றும் உள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலிகளுக்கான திறன் மேம்பாடு, காலநிலை மீட்சி மற்றும் உள்ளடக்கிய பெறுமதிச் சங்கிலிகளுக்கான முதலீடு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகிய மூன்று கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகிறது.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,966 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 55.45 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,698 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 42.75 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டது. ரூபா 2,268 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச் செயற்திட்டம் 2021 யூன் 10 இல் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியிருந்ததுடன் 2027 யூன் 10 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **இல.** | **கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்திற்கான ரூபா 3 மில்லியன் தொகையான வாடகை செலவினங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, நடைமுறை பொறுப்புக்கள் அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டன. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம். 2023 திசெம்பரில் தவிர்க்கப்பட்ட ரூபா 3,639,102 அட்டுறு வாடகை செலவினத்தை பிரதிபலிக்கும் வகையில், எதிர்காலத்தில் இதுபோன்ற தவிர்ப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் அமுல்ப்படுத்தி வருகிறோம். | அட்டுறு செலவினங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பான எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 02 இன் பிரகாரம் முன்னைய ஆண்டின் பெறுமதிகளைப் பயன்படுத்தி ஒப்பீட்டுத் தகவல்கள் வழங்கப்படவில்லை. | இப்பிரச்சினையை சீர்செய்வதற்கும், எதிர்காலத்தில் இதுபோன்ற தவிர்ப்புக்கள் ஏற்படாமல் தடுக்கவும் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வோம். | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் எஸ் இன் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்திற்கான ரூபா 34 மில்லியன் தொகையான சொத்து கொள்வனவுகள் அந்த ஆண்டிற்கான நிதி நிலைமை கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படவில்லை. | செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதல் இறுதியில் செலவு தாவல் (cost tab) ஒதுக்கீடுகளுக்கு இணங்க செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பின் முதலீட்டு கிரயத்திற்கு மாற்றப்படும். இதன் விளைவாக, அத்தகைய சொத்துக்கள் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட வருடத்தில் PPE இன் சேர்த்தல் SOFP இல் காட்டப்பட்டிருந்த போதிலும் பணத்தின் உண்மையான நகர்வு ”செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்” என்ற குறிப்பு இல. 16 இன் கீழ் பிரதிபலிக்கிறது. | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் எஸ் இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ரூபா 3 மில்லியன் கூட்டுமொத்தமான ஆறு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்கான மிதியைச் சரிபார்ப்பது தொடர்பான அத்தியாவசிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | PMU இந்த பிரச்சினையை AMC இல் கலந்துரையாடி விசாரணையொன்றை நடாத்துவதற்கு முடிவு செய்துள்ளது. PMU பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினரிடமிருந்து ஏற்கனவே விளக்கங்கள் பெறப்பட்டுள்ளன. இந்த முடிவின் அடிப்படையில், PMU தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். | உரிய உத்தியோகத்தர்கள் மீது விசாரணை நடாத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| | (i) | நி.பி. 138 | கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட வேண்டும். சில கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுபடுத்தும் உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்படாதமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | கொடுப்பனவு சான்றுபடுத்தலை உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| | (ii) | நி.பி. 139(10) மற்றும் 261(3) | காசுப் புத்தகத்தில் கூட்டுமொத்தம் எடுக்கப்பட வேண்டும். மேலும் மீதி தினமும் கண்டறியப்பட வேண்டும். போதுமான பணம் கிடைக்காத பட்சத்தில், கொடுப்பனவு எதுவும் காசுப்புத்தகத்தில் பதிவு செய்யப்படக்கூடாது, அல்லது கொடுப்பனவிற்காக காசோலை எழுதப்படக்கூடாது. கொடுப்பனவிற்காக காசோலையை எழுதும் போது வங்கிக் கணக்கில் போதுமான மீதி இருக்கிறதா என்பது கருத்தில் கொள்ளப்படாதமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | காசுப் புத்தகத்தில் கூட்டுமொத்தம் எடுக்கப்பட வேண்டும். மேலும் மீதி தினமும் கண்டறியப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நி.பி. 371 & 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பிஎவ்டி/ஆர்ஈடி/01/01/2020/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி | முற்பணம் ரூபா 100,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 6,590,385 தொகையான ரூபா 100,000 ஐ விஞ்சிய 27 முற்பணங்கள் விடுவிக்கப்பட்டன. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். |
| (iv) | நி.பி. 372 | முற்பணம் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் அடிக்கடி சரிபார்க்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்ட செலவினங்களிற்கான சில முற்பணங்கள் அங்கீகரிக்கப்படாதமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | முற்பண தீர்ப்பனவு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் அடிக்கடி சரிபார்க்கப்பட வேண்டும். |
| (v) | நி.பி. 454 | ஒவ்வொரு பிரிவும் பிரிவொன்றின் உப அலுவலகமும் பொருளிருப்பு புத்தகத்தை படிவம் பொது 44 இல் வைத்திருக்க வேண்டும். செயற்திட்டத்தால் பொருளிருப்பு புத்தகங்கள் பேணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | பொருளிருப்பு புத்தகங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட வேண்டும். |
| (vi) | நி.பி. 756 மற்றும் 757 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் நியமனம் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 15 இல் அல்லது அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும். வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை உரிய திகதியில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தியிருக்கவில்லை. ஆண்டின் போது | செயற்திட்டப் பக்கத்தில் உள்ள BOS இற்கு பரிந்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள் உரிய காலத்தில் தேவையான ஏற்பாடுகளுக்காக MOAPI இற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அமைச்சின் முடிவில் மேலதிக ஏற்பாடுகளுக்காக காத்திருக்கிறது. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபை உரிய திகதியில் நியமிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திட்டமானது ரூபா 34.24 மில்லியன் கணனிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்துள்ளது. மேலும், 2024 மே 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 01/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்ட உள்ளக கணக்காய்வு குழு கூட்டம் முதலாவது மற்றும் மூன்றாவது காலாண்டில் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் கூட்டம் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது நாம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலின் பிரகாரம் நம்மை இணைத்துக் கொண்டுள்ளோம். | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்ட வழிநடாத்தல் குழு (PSC) கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நான்கு PSC கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையில் வழங்கப்பட்ட வழிகாட்டலுடன் நாங்கள் எங்களை இணைத்துள்ளோம், மேலும் அனைத்து வழிநடாத்தல் குழு கூட்டங்களும் அதன் பிரகாரம் பட்டியலிடப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் வழிநடாத்தல் குழு (PSC) கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2009 ஏப்ரல் 16 மற்றும் 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 மற்றும் 09/2009 (1) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ அலகில் வருகையைப் பதிவு செய்வதற்கு கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கைவிரல் அடையாள இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு PMU நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் பெறுகை செயன்முறை நடைபெற்று வருகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2019 நவம்பர் 04 இல் வெளியிடப்பட்ட செயற்திட்ட வடிவமைப்பு அறிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தை 2020 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டது, எனினும் நிதி உடன்படிக்கை 2021 யூன் 10 இல் கைச்சாத்திடப்பட்டது, மேலும் இந்த செயற்திட்டத்தின் காலம் 06 ஆண்டுகள் ஆகும். இந்த செயற்திட்டம் 2022 ஆகஸ்ட் முதல் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் 05 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே அறிக்கையிட்டுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது. | 2023.12.31 இல் உள்ளவாறு செயற்திட்ட அணிதிரட்டல், PRA மற்றும் ஏனைய முயற்சிகள் மாத்திரமே தொடங்கப்பட்டன. | முன்னரே தீர்மானிக்கப்பட்ட கால எல்லைக்குள் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொள்ளும் போது, IFAD கடனுக்கான ஐ.அ.டொலர் 41.70 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டிலிருந்து ஐ.அ.டொலர் 367,590 நிதியை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியமை அவதானிக்கப்பட்டது. சதவீதமொன்றாக, இது 1 சதவீதமாக இருந்தது. எனவே, மீதமுள்ள மூன்றரை ஆண்டு காலத்தை மிகுதி நிதியுடன் கருத்தில் கொள்ளும் போது நிதிகளின் பயன்பாடு செயற்திறனற்றிருந்தது. | முகாமைத்துவத்தால் எந்த கருத்துரையும் தெரிவிக்கப்படவில்லை. | நிதிகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மேலும், SARP இற்காக இலங்கை அரசாங்கத்தின் இணங்கப்பட்ட மொத்த பங்களிப்பு ஐ.அ.டொலர் 12.70 மில்லியன் ஆகும், மீளாய்வாண்டில் உள்ளவாறான அரசாங்க நிதியின் ஒட்டுமொத்த பயன்பாடு ஐ.அ.டொலர் 0.08 மில்லியன் மாத்திரமே ஆகும். மேலும் இது இணங்கப்பட்ட தொகையின் 0.62 சதவீதத்திற்கு சமமானதாகும். இந்த செயற்திட்டம் 2027 யூன் 10 இல் முடிவடைய உள்ளதுடன் அடுத்த மூன்றரை ஆண்டுகளில் இணங்கப்பட்ட அரசாங்க நிதியில் மீதமுள்ள 99 சதவீதத்தை பயன்படுத்துவது நிச்சயமற்றதாகும். | முகாமைத்துவம் அவதானிப்பை ஏற்றுக்கொண்டிருந்தது. மேலும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகள் சரியாக திட்டமிடப்பட்டு நிதிகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீள்நிரப்பு செய்யக்கூடிய ரூபா 300 மில்லியன் வெளிநாட்டுக் கடனுக்கான ஒதுக்கீட்டில் இருந்து மீளாய்வாண்டில் செயற்திட்டம் ரூபா 120.29 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியுள்ளமை அவதானிக்கப்பட்டது. எனவே, மொத்த ஒதுக்கீட்டில் 59 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 179.71 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் அவதானிப்பை ஏற்றுக்கொண்டிருந்தது. மேலும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | செயற்திட்டத்தின் கீழ் ரூபா 30 மில்லியன் GOSL ஒதுக்கீட்டில் ரூபா 20 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் மெதுவான முன்னேற்றம் காரணமாக 33 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023.12.31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாததால் ரூபா 10 மில்லியன் மிகுதி கட்டுநிதி அமைச்சிற்கு திருப்பி அனுப்பப்பட்டது. | நிதிகள் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2022 பெப்ரவரி 07 ஆம் திகதிய 1/2022 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு வருடத்திற்கும் அதிகமான செயற்திட்ட காலப்பகுதி மற்றும் ஐ.அ.டொலர் 05 மில்லியனுக்கும் அதிகமான மொத்த கிரயம் கொண்ட செயற்திட்டங்களுக்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 01 வரை உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. மேலும், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர் மேவுகை பணிகளுக்காக நியமிக்கப்பட்டார். அந்த நபரும் வேலையை விட்டு வெளியேறினார், மேலும் 2024 மார்ச் 21 இல் மேவுகை கடமைகளுக்காக புதிய உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டார். | SARP PMU இற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆரம்ப கோரிக்கை 2023 யூலை 24 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 38 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்திட்டத்தால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். அந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகளில் இருக்க வேண்டிய ஆட்சேர்ப்புக்கான அடிப்படை தகுதி ஆவணங்கள் முறைசாராதவையாகும். மேலும், பதவிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் சரியான தன்மை/ நம்பகத்தன்மையானது சான்றிதழ்களை சமர்ப்பித்த நிறுவனங்களிடமிருந்து சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட முகாமைத்துவ சுற்றறிக்கை 01/2019 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் ஆவணங்களை முறையாக சீரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. மேலும் இந்தப் | சரிபார்க்கப்பட்ட ஊழியர்களின் தகைமைகள் மற்றும் தனிப்பட்ட கோவைகள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | பதவிநிலைகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் சரியான தன்மை மற்றும் நம்பகத்தன்மையை சரிபார்க்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. |

**3.4 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டம் ரூபா 25,000 சிறுசெலவு காசு கட்டுநிதி தொகையை பேணுகிறது. பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளின் பிரகாரம், சிறுசெலவு காசு கட்டுநிதி அறிக்கையிடல் ஆண்டின் இறுதியில் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 வரை சிறுசெலவு காசு கட்டுநிதி கணக்கைத் தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | அனைத்து சிறுசெலவு காசு கட்டுநிதிகளும் கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 வரை ரூபா 1 மில்லியன் பதவியணியினர் முற்பண தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | பதவியணியினர் முற்பணம் கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். முற்பணத்தை தீர்ப்பனவு செய்திருக்காத ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பேரேட்டு குறியீடுகள் இல்லாமல் பொதுப் பேரேடுகளைப் பேணுகின்ற பகுதிகளில் பொதுப் பேரேட்டை பேணுவது தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனம், பதிவுகள் தொகுதி வாரியாக மேற்கொண்டு அப் பதிவுகளின் சரியான தன்மை மற்றும் முழுமைத்தன்மை வேறு எந்த உத்தியோகத்தராலும் சரிபார்க்கப்படாததால் தவறான பேரேட்டு பதிவுகள், காசுப்புத்தகத்தை பேணாதமை போன்றன அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் இதுபோன்ற சிக்கல்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, PMU ஒரு புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமை மற்றும் சரியான நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | முறையான உள்ளக கட்டுப்பாடுகள் பேணப்பட வேண்டும். மேலும் சரியான கணக்கீட்டு மென்பொருள் முறைமை பயன்படுத்தப்பட வேண்டும். |